# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.19974/C/2023

திரு A. V. அருள்சிங் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 10.07.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 02.09.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 15.11.2023 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு A. V. அருள்சிங் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி மா. சுமதி, ஆராய்ச்சி அலுவலர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், வனத்துறை தலைமையிடம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை முதன்மை தலைமை வனபாதுகாவலர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், Thiru. Nihar Ranjan, I.F.S. District Forest Officer, Madurai அவர்கள்மீது பணியாளர்கள் கொடுத்த புகார் மனுக்களை விசாரித்த ொடுத்த புகார் மனுக்களை விசாரித்த Thiru A.O. Limatoshi, I.F.S, Chief Conservator of Forest (Protection & Vigilance South) Chenai-15 அவர்களது அலுவலக எண்.PE2/018689/2017 நாள் 16.11.2017 குறித்த கடிதம் மற்றும் விசாரணை அறிக்கை (இணைப்புகளுடன்) Principal Chief Conservator

of Forest, Chennai – 15 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதின் நகல்கள் certified copies, Government D.O.Letter No.2311/FR Spl-A/2012-2 dated 13.02.2012 குறித்த கடிதத்தின் நகல் மற்றும் Certified Copies, Thiru. Nihar Ranjan, I.F.S. அவர்களுக்கு குற்றத்தாள் ஏதேனும் வழங்கி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 4 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.களஎ.ஆர்டிஐ/19769/2023 நாள் 27.02.2025 தேதியிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி, தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து முழுமையான தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள PE2/018689/2017 நாள் 16.11.2017 குறித்த கடிதம் மற்றும் விசாரணை அறிக்கையின் நகல் ஆகியவற்றினை தனக்கு தகவல்களாக பெற்று வழங்குமாறு ஆணையத்தை கோரினார்.

*6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள* PE2/018689/2017 நாள் 16.11.2017 குறித்த கடிதம் மற்றும் விசாரணை அறிக்கையின் நகல் ஆகியவற்றினை மனுதாரருக்கு *முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு* ***<u>26.05.2026</u>*** *அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஓம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.19974/C/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் / ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

**<u>வழக்கு எண்.SA.19974/C/2023</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு A. V. அருள்சிங்,
எண்.1/26 A, அருளகம்,
நரிக்குளம், மகாதானபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 702.

Copy to: File
SNPS / 17.04.2026